## விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் - மாத்தூர், மடிப்பாக்கம், ஜல்லடியான்பேட்டை மற்றும் உத்தண்டி

**முகவுரை:**

சென்னை மாநகரின் விரிவாக்கப் பகுதிகளான மாத்தூர், மடிப்பாக்கம், ஜல்லடியான்பேட்டை மற்றும் உத்தண்டி 4 வார்டுகளை உள்ளடக்கியது 12.07 சதுர கி.மீ பரப்பளவு மற்றும் 213.8 கி.மீ நீளமுடைய சாலையை உடையது ஆகும்.

மாத்தூர், மடிப்பாக்கம், ஜல்லடியான்பேட்டை மற்றும் உத்தண்டி பகுதிகளுக்கு விரிவான குடிநீர் திட்டப் பணிகள் (அரசு ஆணை (எம்.எஸ்) எண்.43, ந.நி.ம.கு.வ (எம்.எ) துறை, நாள் 28.02.2019) அம்ருத்-ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின் கீழ் ரூ 196.13 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டது.

நீர் ஆதாரம் - மீஞ்சூர் (வடக்கு - சென்னை) மற்றும் நெம்மேலி (தெற்கு - சென்னை) ஆகிய இடங்களில் தற்போதுள்ள கடல் நீர் குடிநீராக்கும் நிலையங்கள்.

**பணியின் நோக்கம்:**

மாத்தூர், மடிப்பாக்கம், ஜல்லடியான்பேட்டை மற்றும் உத்தண்டி ஆகிய பகுதிகளுக்கு விரிவான குடிநீர் வழங்கல் திட்டம் கீழ்க்காணும் திட்ட நோக்கம் உடையது:

1. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் - 4.
   (மாத்தூர் - 12 ல.லி, மடிப்பாக்கம் - 50 ல.லி, ஜல்லடியான்பேட்டை - 13 ல.லி, உத்தண்டி - 8 ல.லி)
2. கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்தல் - 4.
   (மாத்தூர் - 2 ல.லி, மடிப்பாக்கம் - 15 ல.லி, ஜல்லடியான்பேட்டை - 2 ல.லி, உத்தண்டி - 2 ல.லி)
   உடன் உந்து நிலையம் அமைத்தல்.
3. பகிர்மான குழாய்கள் அமைத்தல் – 2,23,099 மீ.
4. உந்து குழாய்கள் அமைத்தல் - 988 மீ.
5. வீட்டு குடிநீர் இணைப்புகள் - 23,716

**ஒப்பந்தவிவரங்கள்:**

இத்திட்டத்திற்கான ஒப்பந்ததாரர் திருவாளர்கள் சத்வா-ஸ்ரீராம் இ.பி.சி இணையர்கள், இத்திட்டப்பணி ரூ.104.81 கோடி மதிப்பீட்டில், 30.08.2018 அன்று ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. திட்ட காலம் 24 மாதங்கள் ஆகும். இத்திட்டப்பணிகள் 01.02.2019 அன்று துவக்கப்பட்டு 31.01.2021-ல் முடிக்க திட்டமிடப்பட்டது.

**பணியின் முன்னேற்ற நிலை 07.03.2023:**

- மாத்தூர் மற்றும் ஜல்லடியான்பேட்டை பகுதிகளில் தற்பொழுது வெள்ளோட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- குடிநீர் இணைப்பு விநியோகத்திற்காக குழாய்கள் பதிக்கும் பணிகள் சுமார் 210கி.மீ நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது. மடிப்பாக்கம் மற்றும் உத்தண்டி பகுதிகளில் குடிநீர் பகிர்மான நிலையங்கள் அமைக்கும் பணிகள் தற்பொழுது நடைபெற்று கொண்டிருக்கிறது.
- பணி முன்னேற்றம் – **90.80** %
- நிதி முன்னேற்றம் – **87.37** %
- பணிகள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள நாள்-**30.06.2023**

இத்திட்டம் நிறைவேறியவுடன், 1.10 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.







Dr. MGR Statue
Coral Cove - ECR Chennai
TNHB
Green Beach Resort
Panayur Beach ECR
Matsya Narayana Temple
HIG - III
Tao Temple
NAINARKUPPAM
நைனார்குப்பம்
Uthandi Beach
UTHANDI
உத்தண்டி
Samarah Villa Beach House
Kanathur
கானத்தூர்
Pooja Garden Beach House
OLD VANDIPALAYAM
CHERI
Google